## மிஹிந்தலை பிரதேச சபை

## அனுராதபுரம் மாவட்டம்

### 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 ஏப்ரல் 30 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2012 ஏப்ரல் 20 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2013 திசெம்பர் 20 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் காணப்படும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் காரணமாக கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள மிஹிந்தலை பிரதேச சபையின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீது என்னால் அபிப்பிராயமொன்றை தெரிவிக்க முடியாதுள்ளது.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) நிதிக்கூற்றுக்களில் காணப்படுகின்ற தேறிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் கூட்டுத்தொகைகளுக்கிடையே ரூபா 1,931,266 தொகையான வேறுபாடு காணப்பட்டது.

(ஆ) காணி மற்றும் கட்டிடங்களின் பெறுமதி ரூபா 5,294,253 இனால் குறைவாகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்திற்குச் செலுத்த வேண்டிய ருபா 3,958,710 தொகையான கடன் நிதிக்கூற்றுக்களிலிருந்து கைவிடப்பட்டிருந்தது.

---

(ஈ) 1990 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரை செலுத்த வேண்டிய கணக்காய்வுக் கட்டணமான ரூபா 321,489 தொகை மற்றும் ஏனைய பொறுப்புக்கள் ரூபா 138,269 தொகை என்பவற்றுக்காக நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(உ) பெறவேண்டிய நீதி மன்றத் தண்டப்பண வருமானம் ரூபா 990,885 தொகை நிலுவை வருமானமாகக் கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) மோட்டார் வாகனமும் வண்டியும் பெறுமதி ரூபா 890,000 இனால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(எ) முன்னைய 03 வருடங்களுக்குரிய முத்திரைக் கட்டண வருமானங்களின் கூட்டுத்தொகையான ரூபா 1,256,728 மீளாய்வாண்டின் வருமானமாகக் கணக்கு வைக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்குரிய முத்திரைக் கட்டணம் தீர்மானிக்கப்பட்டு கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஏ) பிரதேச சபைக்காக பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு முறைமையின் பிரகாரம் மூலதன ஈடுபடுத்தலுக்கான வருமானப் பங்களிப்புக் கணக்கின் மீதி மற்றும் நிலையான சொத்துக் கணக்குகளின் மீதிகளின் கூட்டுத்தொகை ஒன்றுக்கொள்று சமமாக இருக்க வேண்டிய போதிலும் ரூபா 810,796 தொகையான வேறுபாடு காணப்பட்டது.

**1.3.2 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

---

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 16,232,305 கூட்டுத்தொகையான 03 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

**2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு**

---

**2.1 நிதிப் பெறுபேறுகள்**

---

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 3,335,624 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 117,868 ஆக இருந்தது.

## 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் மீளாய்வாண்டின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) |
| (i) | வீதவரியும் வரியும் | 15 | 42 | 57 |
| (ii) | வாடகை | 6,193 | 4,969 | 565 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 1,327 | 1,251 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 4,750 | 5,555 | 260 |

### 2.2.2 ஆதன வரி

1992 ஆகஸ்ட் 05 ஆந் திகதிய 726/30 ஆம் இலக்க பிரதேச சபையின் தலைவரினால் வழங்கப்பட்ட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் மிஹிந்தலை கிராம உத்தியோகத்தர் பிரிவை அபிவிருத்தியடைந்த பிரதேசமாக பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும் ஆதன வரி அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

(அ) மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்கவேண்டிய நீதிமன்ற தண்டப்பண வருமானம் ரூபா 990,865 ஆகும்.

(ஆ) 2011 திசெம்பர் 31 ஆந் திகதி வரை நிலுவை முத்திரைக்கட்டண வருமானம் ரூபா 1,400,341 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டிற்காகக் கிடைக்க வேண்டிய முத்திரைக் கட்டணம் இனங்காணப்பட்டு கணக்குகளுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

## 2.3 செயற்பாடற்ற மற்றும் குறைவான பயன்பாடுடைய பௌதீக வளங்கள்

அரிசிமாவை அண்மித்த உற்பத்திகளை மேம்படுத்தும் நோக்கில் 2008 ஆம் ஆண்டின் போது செலவிடப்பட்ட ரூபா 565,000 தொகையான செலவினம், உரிய செயற்திட்டத்தை அமுல்படுத்த முடியாமையினால் பயன்பாடற்றுக் காணப்பட்டது. இந்த வளங்களை பயன்பாட்டிற்கு எடுப்பதற்காக மாற்று வழிகளை எடுப்பதற்கு பொறுப்புவாய்ந்த தரப்பினர்கள் கவனம் செலுத்தியிருக்கவில்லை.

## 2.4 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

எதிர்வரும் வருடங்களின் செயற்பாடுகளுக்குரிய திட்டங்களை உள்ளடக்கி கூட்டிணைந்த திட்டமும் அமுல்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்ட செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கான செயல்நடவடிக்கைத் திட்டமும் தயாரிக்கப்பட்டு அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 3. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) உள்ளகக் கட்டுப்பாடு
(இ) வருமான நிருவாகம்
(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(உ) கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு